12-வகுப்பு

நேரம் : 3 மணி

மதிப்பெண்கள் : 90

# அரையாண்டுத் தேர்வு - 2022

## கணக்குப்பதிவியல்

மதுரை மாவட்டம்

23-12-2022

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :(20 X 1 =20)

1.பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்

(அ) நட்டம் (ஆ) ரொக்கம் (இ) முதல் (ஈ) இலாபம்

2. நிலைஅறிக்கைபொதுவாக வியாபாரத்தின் _____ கண்டறியதயாரிக்கப்படுகிறது.

(அ) இலாபம் (அ) நட்டம் (ஆ) நிதிநிலை (இ) முதல் (ஈ) கணக்கீட்டுசரித்தன்மை

3.வருவாய் மற்றும் செலவினக்கணக்கு ஒரு

(அ) பெயரளவுக்கணக்கு (ஆ) சொத்து கணக்கு (இ) ஆள்சார் கணக்கு (ஈ) பிரதிநிதித்துவஆள்சார் கணக்கு

4.விளையாட்டு உபகரணம் வாங்குவதுஒரு

(அ) வருவாயினச் செலவு (ஆ) முதலினச் செலவு (இ) வருவாயின வரவு (ஈ) முதலின வரவு

5.கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போதுகூட்டாளிகள்பெறத்தகுதியுடையது

(அ) சம்பளம் (ஆ) கழிவு (இ) கடன் மீது வட்டி (ஈ) முதல் மீது வட்டி

6.ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும்வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக

(அ) 5.5மாதங்கள் (ஆ) 6 மாதங்கள் (இ) 12 மாதங்கள் (ஈ) 6.5 மாதங்கள்

7.சராசரி இலாபம் ரூ 25,000 மற்றும் சாதாரண இலாபம் ரூ 15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்

(அ) ரூ 25,000(ஆ) ரூ 5,000 (இ) ரூ 10,000 (ஈ) ரூ 15,000

8. சரியற்ற இணையினை அடையாளம் காணவும்;

(அ) சராசரி இலாப முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஆ) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

(ஈ) கூட்டுசராசரிஇலாபமுறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின்எண்ணிக்கை

9.மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு

(அ) சொத்து க/கு (ஆ) பெயரளவு க/கு(இ) ஆள்சார் க/கு (ஈ) ஆள்சாரா க/கு

10. கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும்கூற்றுகளில் எது உண்மையானதல்ல?

(அ) பொதுவாக கூட்டாளிகளின்பரஸ்பர உரிமைகள் மாறும்

(ஆ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்குபகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

(இ)கூட்டாண்மைநிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின்கீழ்மறுகட்டமைக்கப்படும்

(ஈ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது

11. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளியாகஇருந்த'A' என்பவர் 2019, மார்ச்31 அன்று இறந்து விட்டார். அவருக்கு செலுத்தவேண்டியஇறுதித்தொகைரூ.25,000 உடனடியாகச்செலுத்தப்படவில்லை. அது மாற்றப்பட வேண்டிய கணக்கு

(அ) A-ன் முதல் கணக்கு (ஆ) A-ன் கடன் கணக்கு (இ) A –ன்நிறைவேற்றாளர் கணக்கு

(ஈ) A –ன்நிறைவேற்றாளர்கடன் கணக்கு

12. A, Bமற்றும் C என்றகூட்டாளிகள்2:2:1 என்றவிகிதத்தில்இலாபநட்டத்தைபகிர்ந்து வந்தனர். B-ன் விலகலின் போது நிறுவனத்தின்நற்பெயர்ரூ.15,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளி B-க்கு ஈடு செய்வதற்கு A மற்றும் C யின்பங்களிப்பைக் கண்டறியவும்.

(அ)ரூ. 2,000மற்றும்ரூ. 1,000 (ஆ)ரூ. 8,000மற்றும்ரூ. 4,000

(இ)ரூ. 10,000மற்றும்ரூ. 20,000 (ஈ)ரூ. 10,000 மற்றும்ரூ. 5,000



www.Padasalai.Net

Scanned with CamScanner

13.நிறுமக்கலைப்பின்போது மட்டுமேஅழைக்கப்படக் கூடிய பங்கு முதலின்ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் (ஆ) அழைக்கப்பட்ட முதல் (இ) முதலினக் காப்பு(ஈ) காப்பு முதல்

14. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும்கணக்கு

(அ) விற்பனையாளர்க/கு(ஆ) பற்பல சொத்துகள் க/கு (இ) பங்குமுதல் க/கு (ஈ) வங்கி க/கு

15. நிதிநிலைஅறிக்கைகள் வெளிக்காட்டாதது

(அ) பணம்சாராதகவல்கள்(ஆ) கடந்தகாலதகவல்கள்(இ) குறுகிய கால தகவல்கள்(ஈ) நீண்டகால தகவல்கள்

16.பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது அல்ல?

(அ)நிதிநிலைஅறிக்கையின்குறைபாடுகள் அனைத்தும் நிதிநிலைஅறிக்கைகள்பகுப்பாய்விற்கும் பொருந்தும்.

(ஆ) நிதிநிலைஅறிக்கைபகுப்பாய்வு ஒரு வழிமுறை, இது ஒரு முடிவல்ல. (இ) நிதிநிலைஅறிக்கைபகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை. (ஈ) ஆய்வு செய்யப்பட்ட தகவல்களைஉய்த்துணர்வது தனிப்பட்ட கருத்துகளை உள்ளடக்கியதாகும்.

17. பட்டியல்ஒன்றைபட்டியல் இரண்டுடன்பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத்தேர்ந்தெடுக்கவும்.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (i) நடப்பு விகிதம் | 1. நீர்மைத் தன்மை |
| (ii) நிகர இலாப விகிதம் | 2. செயல்திறன் |
| (iii) புறஅக பொறுப்புகள் விகிதம் | 3. நீண்டகால கடன் தீர்க்கும் திறன் |
| (iv) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் | 4. இலாபத்தன்மை |

குறியீடுகள்: (i) (ii) (iii) (iv)

(அ) 1 4 3 2 (ஆ) 3 2 4 1 (இ) 4 3 2 1 (ஈ) 1 2 3 4

18. பங்குதாரர் நிதிக்கும் மொத்தசொத்துகளுக்கும் உள்ளவிகிதாச்சாரம்

(அ) உரிமையாளர் விகிதம் (ஆ) முதல்உந்துதிறன் விகிதம்

(இ) புறஅக பொறுப்பு விகிதம் (ஈ) நடப்பு விகிதம்

19.எதிர்ப்பதிவுசான்றாவணம்எதற்காகப்பயன்படுத்தப்படுகிறது?

(அ) தலைமைப்பதிவு (ஆ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்தரொக்கம்

(இ) அறிக்கைகள் (ஈ) சொத்துகள்கடனுக்கு வாங்கியது

20.Tally-யின்நுழைவாயிலிலிருந்துஇருப்பாய்வைபார்வையிட எந்தவிருப்பத்தேர்வு பயன்படும்?

(அ) Gateway of Tally -> Reports -> Trial Balance (ஆ) Gateway of Tally -> Trial Balance

(இ) Gateway of Tally -> Reports -> Display -> Trial Balance(ஈ) இவைகளில் ஏதுமில்லை

## பகுதி – II

II.எவையேனும் 7 வினாக்களுக்குவிடையளிக்கவும். (வினா எண். 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) (7 X 2 =14)

21.ஏதேனும் 4கணக்கியல் அறிக்கைகள்கூறு.

22. நடைமுறைமுதல் என்றால் என்ன ?

23. நற்பெயர் என்றால் என்ன?

24.உயில்கொடை என்றால் என்ன?

25.முழுமைபெறாபதிவேடுகள்என்றால்என்ன?

26.பின்வரும் தகவல்களிலிருந்து, 2018, டிசம்பர்31 ஆம் நாளையமுதல்கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 |
| உரிமையாளர்தனது சொந்தபயனுக்காக சரக்கு எடுத்தது | 30,000 |
| அவ்வாண்டில்கொண்டுவந்தகூடுதல்முதல் | 15,000 |
| அவ்வாண்டின்இலாபம் | 60,000 |

27.பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டுமன்றத்தின்இறுதிக்கணக்குகளில்எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 1.4.2018 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 16,000 |
| அவ்வாண்டில்வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | 84,000 |
| 31.3.2019 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 10,000 |



www.Padasalai.Net
Scanned with CamScanner

28.ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின்இலாபங்கள்பின்வருமாறு:
2014: ரூ. 10,000; 2015: ரூ. 11,000; 2016: ரூ. 12,000; 2017: ரூ. 13,000 மற்றும் 2018: ரூ. 14,000,
5 ஆண்டுகள் சராசரிஇலாபத்தில்2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

29.விவின், ஹரி மற்றும் ஜாய்என்றகூட்டாளிகள் 3:2:1 எனும்விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். 31-3-2017 அன்று ஹரி விலகினார். அவர் விலகியநாளில், நிறுவனத்தின் ஏடுகளில்பொதுக்காப்புரூ.60,000 காட்டியது. பொதுக்காப்புமாற்றுவதற்கானகுறிப்பேட்டுப்பதிவைத் தரவும்

30.சாரா நிறுமம்பங்கொன்றுரூ.10 வீதம் 50,000 நேர்மைப்பங்குகளை ரூ.2 முனைமத்தில்,விண்ணப்பத்தின்போதுமுழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. குறிப்பேட்டுப்பதிவுகள் தரவும்.

## பகுதி – III

III. எவையேனும்7வினாக்களுக்குவிடையளிக்கவும் :
(வினா எண்: 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) (7 X 3 = 21)

31.கூட்டாண்மைஒப்பாவணத்தின்உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

32.தியாகவிகிதத்திற்கும்ஆதாயவிகிதத்திற்கும் உள்ளவேறுபாடுகள் யாவை?

33.நற்பெயரைத்தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.

34.பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின்2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரியஇறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும்.

ப 2019, மார்ச் 31 ஆம் ஆண்டிற்குரியபெறுதல்கள்செலுத்தல்கள் கணக்கு வ

| பெறுதல்கள் | ரூ. | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| சந்தா | | | | |
| 2017-2018 | 10,000 | | | |
| 2018-2019 | 50,000 | | | |
| 2019-2020 | 5,000 | 65,000 | | |

மன்றத்தில்உள்ள200 உறுப்பினர்கள்ஒவ்வொருவரும்ஆண்டுசந்தாவாகரூ.400 செலுத்துகின்றனர். 2017–2018 ஆம்ஆண்டில்இன்னும்பெறவேண்டியசந்தாரூ2000.

35.அருண்என்பவர் ஒரு கூட்டாண்மைநிறுவனத்தின்கூட்டாளி. கூட்டாண்மைஒப்பாவணத்தின்படி எடுப்புகள்மீது வட்டி ஆண்டுக்கு 12% விதிக்கவேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள்பின்வருமாறு:

| நாள் | ரூ. |
|---|---|
| மார்ச் 1 | 6,000 |
| ஜூன்1 | 4,000 |
| செப்டம்பர் 1 | 5,000 |
| டிசம்பர் 1 | 2,000 |

எடுப்புகள்மீதானவட்டித்தொகையைக்கணக்கிடவும்.

36. கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில்3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| ஆண்டு | இலாபம் ரூ. | நிறைகள் |
|---|---|---|
| 2015 | 10,000 | 1 |
| 2016 | 12,000 | 2 |
| 2017 | 16,000 | 3 |
| 2018 | 18,000 | 4 |

37. ஹமீது மற்றும் கோவிந்த் என்ற இரு கூட்டாளிகள் 5:3 விகிதத்தில்இலாபநட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ஜான்என்பவரைகூட்டாளியாகச்சேர்த்தனர். ஜான்ஹமீதிடமிருந்து 1/5 பங்கும், கோவிந்திடமிருந்து 1/5 பங்கும்பெறுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாகவிகிதம்கணக்கிடவும்.



www.Padasalai.Net
Scanned with CamScanner

38.ஜெயம் டயர்ஸ்நிறுமம் 15,000 சாதாரணப்பங்குகளைரூ.10 விதம் பின்வருமாறு செலுத்தும்படி வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீதுரூ.3 ஒதுக்கீட்டின்மீதுரூ.5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின்மீதுரூ.2. அனைத்து தொகையும்பெறப்பட்டது. ஆனால் 100 பங்குகளைவைத்திருக்கும் ஒரு பங்குதாரர்அழைப்பு பணத்தைசெலுத்தத்தவறினார். அழைப்பு நிலுவைக்கணக்கைப்பயன்படுத்தி அழைப்பிற்கானகுறிப்பேட்டுப்பதிவுகளைத்தரவும்.

39. ராதாநிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2017, மார்ச்31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரியபொது அளவுவருமானஅறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016-17 |
|---|---|
| விற்பனைமூலம் பெற்ற வருவாய் | 4,50,000 |
| இதர வருமானம் | 67,500 |
| செலவுகள் | 1,35,000 |

40.பின்வரும் விவரங்களிலிருந்துஅவ்வாண்டில் மேற்கொண்ட மொத்தவிற்பனையைகண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில்கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத்திருப்பம் | 35,000 |
| வாராக்கடன் | 15,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |

## பகுதி – IV

IV. அனைத்து வினாக்களுக்குவிடையளிக்கவும்: (7X 5= 35)

41.(அ)டேவிட்முறையானகணக்கேடுகளைப்பராமரிக்கவில்லை. அவருடையஏடுகளிலிருந்து தரப்பட்டுள்ள விவரங்கள்பின்வருமாறு:

| விவரம் | 1.4.2018 | 31.3.2019 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ரொக்கம் | 43,000 | 29,000 |
| சரக்கிருப்பு | 1,20,000 | 1,30,000 |
| பற்பலகடனாளிகள் | 84,000 | 1,10,000 |
| பற்பலகடனீந்தோர் | 1,05,000 | 1,02,000 |
| கடன் | 25,000 | 20,000 |
| வணிக வளாகம் | 2,50,000 | 2,50,000 |
| அறைகலன் | 33,000 | 45,000 |

அவ்வாண்டில்அவர்கூடுதல்முதலாகரூ.45,000 கொண்டு வந்தார். தன்னுடையவியாபாரத்திலிருந்து சொந்தபயனுக்காகரூ.2,500 ஒவ்வொரு மாதமும்எடுத்துக்கொண்டார். மேற்கண்டவிவரங்களைக் கொண்டு இலாபநட்டஅறிக்கையை தயார்செய்யவும். (அல்லது)

(ஆ)ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகளானஇரகு, இரவி, இரமேஷ் தங்களுடையஇலாபநட்டங்களை 2:3:1 என்றவிகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச்31 ஆம் நாளையஅவர்களின் இருப்புநிலைக்குறிப்புபின்வருமாறு.

2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | கட்டடம் | | 60,000 |
| இரகு30,000 | | இயந்திரம் | | 70,000 |
| இரவி 40,000 | | சரக்கிருப்பு | | 20,000 |
| இரமேஷ்20,000 | 90,000 | கடனாளிகள் | 18,000 | |
| காப்புநிதி | 36,000 | கழிக்க:<br>வாராக்கடன் ஒதுக்கு | 1,000 | 17,000 |
| பற்பல கடனீந்தோர் | 50,000 | வங்கி ரொக்கம் | | 9,000 |
| | 1,76,000 | | | 1,76,000 |

பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இரமேஷ் 31.03.2019 அன்று விலகினார்.

(i) நிறுவனத்தின் நற்பெயர்ரூ. 24,000 என மதிப்பிடப்பட்டது. (ii) இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்கவேண்டும்

(iii) கட்டடம் 20%மதிப்பேற்றம் செய்யப்படவேண்டும். (iv) சரக்கிருப்புரூ. 2,000மதிப்பேற்றம் செய்யப்படவேண்டும்

(v) வாராஜயக்கடன்ஒதுக்குரூ. 1,000அதிகரிக்கப்படவேண்டும்.



www.Padasalai.Net

Scanned with CamScanner

(vi) இரமேஷிற்கு சேர வேண்டியத் தொகைஉடனடியாகவழங்கப்படவில்லை

மறுமதிப்பீட்டுக்கணக்கு, விலகலுக்குப் பின் உள்ளகூட்டாளிகளின் முதல் கணக்கு தயார் செய்யவும்.

42.(அ)பின்வரும் விவரங்களிலிருந்துமொத்தக்கொள்முதலைக்கணக்கிடவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 | 2018, ஜனவரி 1 அன்று செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு | 25,000 |
| கொள்முதல் திருப்பம் | 15,000 | கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 |
| ரொக்கக் கொள்முதல் | 2,25,000 | 31.12.2018 அன்று கடனீந்தோர் | 25,000 |
| செலுத்தற்குரியமாற்றுச்சீட்டுக்குச்செலுத்தியது | 30,000 | 31.12.2018 அன்று செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு | 20,000 |

(அல்லது)

(ஆ) மகேஷ்நிறுமத்தின்2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| விவரம் | ரூ. |
|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| 1. பங்குதாரர் நிதி | |
| நேர்மைப்பங்குமுதல் | 2,00,000 |
| 2. நீண்டகால பொறுப்புகள் | |
| நீண்டகாலக்கடன்கள் | 50,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | |
| (அ) குறுகிய காலக்கடன்கள் | 17,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் செலுத்தவேண்டியவைகள் | 25,000 |
| (இ) இதர நடப்புப் பொறுப்புகள் | |
| கொடுபடவேண்டியசெலவுகள் | 3,000 |
| (ஈ) குறுகியகால ஒதுக்குகள் | 5,000 |
| மொத்தம் | 3,00,000 |

| | |
|---|---|
| சொத்துகள் | |
| 1. நீண்டகால சொத்துகள் | |
| (அ) நிலைச்சொத்துகள் | |
| புலனாகும்சொத்துகள் | 1,50,000 |
| 2. நடப்புச்சொத்துகள் | |
| (அ) சரக்கிருப்பு | 45,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகள் | 70,000 |
| (இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச்சமமானவைகள் | 30,000 |
| (ஈ) இதர நடப்புச்சொத்துகள் | |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 5,000 |
| மொத்தம் | 3,00,000 |

(i) நடப்பு விகிதம் (ii) நீர்மைவிகிதம்கணக்கிடவும்

43.(அ) கீழேகொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து கோயம்புத்தூர் கிரிக்கெட்மன்றத்தின்2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரியபெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்கணக்கைத்தயார்செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப் பற்று (1.4.2018) | 6,000 | கடன் மீதான வட்டி செலுத்தியது | 2,000 |
| கை ரொக்கம் (1.4.2018) | 1,000 | நீர்மற்றும் மின்சாரக் கட்டணம் | 700 |
| கூலி செலுத்தியது | 2,000 | விளையாட்டுப் போட்டிச்செலவுகள் | 2,600 |
| சந்தாபெற்றது:<br>முந்தைய ஆண்டு 500 | | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 1,900 |
| நடப்பு ஆண்டு 9,600 | | விளையாட்டுப் போட்டிநிதிவரவுகள் | 5,200 |
| எதிர்வரும் ஆண்டு400 | 10,500 | உயில்கொடைப் பெற்றது | 2,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 | ரொக்கஇருப்பு (31.3.2019) | 300 |
| கூலி கொடுபட வேண்டியது | 2,200 | அரங்கம் அமைப்பதற்காக பெற்ற நன்கொடை | 2,000 |



www.Padasalai.Net

Scanned with CamScanner

(அல்லது)

(ஆ)டெரிக்ஸ்டன்நிறுமத்தின் பின்வரும் இலாபநட்டஅறிக்கையிலிருந்து
(i) மொத்தஇலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

டெரிக்ஸ்டன்நிறுமத்தின்இலாபநட்டஅறிக்கை

| விவரம் | ரூ. |
|---|---|
| I. விற்பனையிலிருந்துபெற்றவருவாய் | 24,00,000 |
| II. இதர வருமானம்: | |
| முதலீடுகளிலிருந்துபெற்றவருமானம் | 70,000 |
| III. மொத்தவருவாய்(I+II) | 24,70,000 |
| IV. செலவுகள்: | |
| கொள்முதல்செய்தசரக்குகள் | 18,80,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (–)80,000 |
| பணியாளர் நலன்களுக்கானசெலவுகள் | 2,90,000 |
| இதர செலவுகள் | 1,10,000 |
| வரி ஒதுக்கு | 30,000 |
| மொத்தசெலவுகள் | 22,30,000 |
| V. அவ்வாண்டின்இலாபம் | 2,40,000 |

44.(அ) பின்வரும் விவரங்களிலிருந்து அப்துல் வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டுவருமானஅறிக்கையைதயார் செய்யவும்.

| விவரம் | 2015-16 ரூ. | 2016-17 ரூ. |
|---|---|---|
| விற்பனைமூலம் பெற்ற வருவாய் | 3,00,000 | 3,60,000 |
| இத்ர வருமானம் | 1,00,000 | 60,000 |
| செலவுகள் | 2,00,000 | 1,80,000 |
| வருமான வரி | 30% | 30% |

(அல்லது)

(ஆ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின்பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்கணக்கிலிருந்து2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக்கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு; | | சம்பளம் | 20,000 |
| கைரொக்கம் | 14,000 | வாடகை | 24,000 |
| வட்டிப் பெற்றது | 5,000 | பயணச்செலவுகள் | 2,000 |
| சந்தா | 55,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| உயில்கொடை | 48,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| நுழைவுக்கட்டணம் | 7,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| அறைகலன்விற்றது (ஏட்டு மதிப்பு ரூ17,000) | 16,000 | இருப்பு கீ/இ: கைரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

45.(அ) நிவேதாவரையறு நிறுமம்ரூ.10 மதிப்பிலான6,000 நேர்மைப்பங்குகளை, அழைப்புத்தொகைபங்கு ஒன்றிற்குரூ.4 வீதம் செலுத்தவில்லைஎன ஒறுப்பிழப்பு செய்தது. இதில், பங்கு ஒன்றிற்குரூ.7 வீதம் 5,000 பங்குகள்மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கானகுறிப்பேட்டுப்பதிவுகளைத்தரவும்.

(அல்லது)

(ஆ) துரைமற்றும் வேலன்2018, ஏப்ரல் 1 அன்று கூட்டாண்மைஒப்பந்தத்தில்ஈடுபட்டனர். துரைரூ.25,000 மற்றும் வேலன்ரூ.30,000 முதலாக கொண்டுவந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக்கொண்டுள்ளது:

(அ) துரைமற்றும் வேலன்இலாபநட்டங்களை 2:3 என்றவிகிதத்தில்பகிர வேண்டும்.

(ஆ) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு5% தரப்பட வேண்டும்.

(இ) எடுப்புகள்மீதானவட்டி கணக்கிடப்பட வேண்டியது:

துரைரூ. 300 மற்றும் வேலன்ரூ. 450.

(ஈ) துரைக்கு ஊதியம்ஆண்டுக்குரூ. 5,000வழங்கப்பட வேண்டும் மற்றும்

(உ) வேலனுக்கு தரப்பட வேண்டிய கழிவுரூ. 2,000.



www.Padasalai.Net

Scanned with CamScanner

அவ்வாண்டில் வட்டி, ஊதியம் மற்றும் கழிவு போன்றவற்றைசரிக்கட்டுவதற்கு முன்நிறுவனம் ஈட்டிய இலாபம்ரூ.20,000. இலாபநட்டப்பகிர்வு கணக்கைத்தயாரிக்கவும்.

46.(அ)வெற்றி மற்றும்இரஞ்சித்இருவரும்கூட்டாளிகள். அவர்கள் 3:2 எனும்விகிதத்தில் இலாபம்பகிர்ந்து வந்தனர். அவர்களது 31-12-2017 நாளன்றையஇருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | அறைகலன் | 25,000 |
| வெற்றி 30,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| இரஞ்சித் 20,000 | 50,000 | கடனாளிகள் | 10,000 |
| பற்பல கடனீந்தோர் | 45,000 | ரொக்கம் | 35,000 |
| பொதுக்காப்பு | 5,000 | இலாபநட்டக் க/கு (நட்டம்) | 10,000 |
| | 1,00,000 | | 1,00,000 |

பின்வரும்சரிக்கட்டுதல்களில்01.01.2018 அன்று சூரியாஎன்பவர்நிறுவனத்தின் புதிய கூட்டாளியாகசேர்கிறார்.
(i) சூரியா1/4இலாபப்பங்கிற்காகரூ. 10,000 முதல் கொண்டுவருகிறார். (ii) சரக்கிருப்பு10%குறைத்து மதிப்பிடப்படுகிறது. (iii) கடனாளிகள்ரூ. 7,500 என மதிப்பிடப்படுகிறது. (iv) அறைகலன்மதிப்புரூ. 40,000 என மாற்றி அமைக்கப்படுகிறது. (v) கொடுபடவேண்டியகூலிரூ. 4,500 இதுவரை பதிவு செய்யப்படவில்லை. (vi) மறுமதிப்பீடுஇலாபம் -ரூ. 6,000
புதிய கூட்டாளி சேர்க்கைக்கு பின் கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும்இருப்புநிலைக் குறிப்பு தயார்செய்யவும்.

(அல்லது)

(ஆ)பின்வரும் தகவல்களிலிருந்து. அனுநிறுமத்தின்போக்கு சதவிகிதங்களைகணக்கிடவும்.

| விவரம் | ரூ. (ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | ஆண்டு1 | ஆண்டு 2 | ஆண்டு3 |
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | | |
| பங்குதாரர் நிதி | 500 | 550 | 600 |
| நீண்டகாலப்பொறுப்புகள் | 200 | 250 | 240 |
| நடப்புப் பொறுப்புகள் | 100 | 80 | 120 |
| மொத்தம் | 800 | 880 | 960 |
| **II.சொத்துகள்** | | | |
| நீண்டகாலச்சொத்துகள் | 600 | 720 | 780 |
| நடப்புச்சொத்துகள் | 200 | 160 | 180 |
| மொத்தம் | 800 | 880 | 960 |

47.(அ)சம்பத்நிறுமம் 25,000 நேர்மைப்பங்குகளை, பங்கு ஒன்று ரூ. 10 என பொதுமக்களுக்குவெளியிட்டது. விண்ணப்பத்தின்போதுரூ.3, ஒதுக்கீட்டின்போதுரூ.4, முதலாம் மற்றும் இறுதி அழைப்பின்போதுரூ.3 செலுத்தப்படவேண்டும். பொதுமக்களால் 24,000 பங்குகள்ஒப்பப்பட்டன. இயக்குனர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். அதற்காகதொகைமுழுவதும் முறையாகப்பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப்பதிவுகளைத்தரவும்.
(அல்லது)
(ஆ) Tally.ERP 9-ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.



Scanned with CamScanner

**+2 கணக்குப்பதிவியல் Hly Mdu Dist. Dec - 22**

**சரியான விடை 20X1=20**

1. (இ) முதல்
2. (இ) முதல்
3. (அ) பெயரளவு கணக்கு
4. (ஆ) முதலினச் செலவு
5. (இ) கடன் மீது வட்டி
6. (ஆ) 6 மாதங்கள்
7. (இ) ரூ 10000
8. (இ)ஆண்டுதொகைமுறையில் நற்பெயர் =சராசரிஇலாபம்X ஆண்டுதொகை காரணியின் தற்போதைய மதிப்பு
9. (ஆ) பெயரளவு க/கு
10. (ஈ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது
11. (ஈ) A-ன் நிறைவேற்றாளர் கடன் கணக்கு
12. அ, ஆ இ ஈ / ரூ 4000 மற்றும் ரூ 2000
13. (ஈ) காப்புமுதல்
14. (இ) பங்கு முதல் க/கு
15. (அ) பணம் சாரா தகவல்கள்
16. (இ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை
17. (அ) 1 4 3 2
18. (அ) உரிமையாளர் விகிதம்
19. (ஆ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
20. (இ) Gateway of Tally – Reports – Display – Trial Balance

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. ஏதேனும் 4 கணக்கியல் அறிக்கைகள் கூறு.**
நாளேடு, குறிப்பேடு, பேரேடு, இருப்பாய்வு, இலாப அறிக்கை, இருப்பு நிலைக்குறிப்பு, ரொக்க ஓட்ட அறிக்கை.

**22. நடைமுறை முதல்:** நடப்பு பொறுப்புகளை விட அதிகமாக உள்ள நடப்பு சொத்துக்களை குறிப்பதாகும்.

**23. நற்பெயர்:** ஒரு தொழிலுக்கு நன்மையை தரக்கூடிய புகழ் நற்பெயர் ஆகும். எதிர்காலத்தில் நிறுனம் ஈட்டக்கூடிய வருமானத்தின் தற்போதைய மதிப்பாகும். இது கண்ணுக்கு புலனாக நிலைச்சொத்தாகும்.

**24. உயில் கொடை:** ஒருவரின் உயில் மூலமாக இலாப நோக்கமற்ற சங்கங்களுக்கு அளிக்கப்படும் பரிசு உயில் கொடை ஆகும். இது ஒரு முதலின வரவாகும்.

**25. முழுமை பெறா பதிவேடுகள்:** இரட்டைப்பதிவு முறையின் படி பராமரிக்கப்படாத பதிவேடுகள் முழுமைபெறா பதிவேடுகள் எனப்படும். இதில் ரொக்க கணக்கு மற்றும் ஆள்சார் கணக்குகள் பதியப்படும்.

**26. இலாப நட்ட அறிக்கை**

| | |
|---|---|
| **இறுதி முதல்** | **145000** |
| கூட்டுக:- எடுப்புகள் | 30000 |
| | 175000 |
| கழிக்க:- கூடுதல் முதல் | 15000 |
| சரிக்கட்டப்பட்ட இ.முதல் | 160000 |
| கழிக்க:- தொடக்க முதல் | 100000 |
| இலாபம் | 60000 |

**27. மார்த்தாண்டம் பெண்கள் வருவாய் செலவினக் கணக்கு**

| செலவுகள் | தொ | தொ | வரு | ெ | ெ |
|---|---|---|---|---|---|
| விளையாட்டு பொருள் தொ.இ | 16000 | | | | |
| கூட்:- நடப்பாண்டில் வாங்கி | 84000 | | | | |
| | 100000 | | | | |
| கழி:- விளை.பொ.இறுதிஇருப் | 10000 | 90000 | | | |

**மார்த்தாண்டம் பெண்கள் இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்பு | | தொ | வருமானம் | தொ | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | வி.பொ. இறுதி இ | | **10000** |

**28.** சராசரி லாபம் = $\frac{\text{மொத்த லாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

$= \frac{10000 + 11000 + 12000 + 13000 + 14000}{5} = \frac{60000}{5} = \mathbf{12000}$

நற்பெயர் = சராசரி லாபம் Xகொ.ஆ.எ= 12000 X 2 = **24000**

**29. குறிப்பேட்டுப் பதிவுகள்**

| விவரம் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| பொதுக்காப்பு க/கு ப. | 60000 | |
| விவின் முதல் க/கு | | **30000** |
| ஹரி முதல் க/கு | | **20000** |
| ஜாய் முதல் க/கு | | **10000** |

**30. சாரா நிறுமத்தின் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| வங்கி க/கு ப | 600000 | |
| நேர்மை பங்கு விண்ணப்ப க/கு | | 600000 |
| நேர்மை பங்கு விண்ணப்ப க/கு ப | 600000 | |
| நேர்மைப் பங்கு முதல் க/கு | | 500000 |
| பத்திர முனைமக் க/கு | | 100000 |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினை கூறவும்.**

நிறுவனத்தின் பெயர், தன்மை மற்றும் தொழில் செய்யும் இடம்.
தொழில் தொடங்கிய நாள் மற்றும் கால அளவு
கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
இலாப பகிர்வு
கூட்டாளிகள் அளித்த முதல்
முதல் மீதான வட்டி
எடுப்புத் தொகை
எடுப்பு மீதான வட்டி
கூட்டாளி ஊதியம்
கூட்டாளி சேர்ப்பு, விலகல் மற்றும் கலைப்பின் போது பின்பற்ற வேண்டியவைகள்.

www.Padasalai.Net

| 32. தியாக விகிதம் | ஆதாய விகிதம் |
|---|---|
| புதிய கூட்டாளிக்கு பழைய கூட்டாளிகள் தியாகம் செய்யும் இலாப பங்கு | தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளிகளிடமிருந்து பெறும் ஆதாய பங்கு |
| தியாகம் செய்யும் கூட்டாளிக்கு நற்பெயர் தொகையை சரிசெய்ய | ஆதாயம் பெறும் கூட்டாளிக்கு நற்பெயர் தொகையை சரி செய்ய |
| கூட்டாளி சேர்ப்பின் போது | கூட்டாளி விலகும் போது |
| தியாக விகிதம் = பழைய விகிதம் - புதிய விகிதம் | ஆதாய விகிதம் = புதிய விகிதம் - பழைய விகிதம் |

**33. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.**

எதிர்காலத்தில் இலாபம் ஈட்டும் திறன் கொண்ட நிறுவனம்.

**நிறுவனத்தின் அமைவிடம்:-** வாடிக்கையாளர் அதிகம் சென்றடைக்கூடிய இடம்.

**நிறுவனத்தின் கால அளவு:-** போட்டிகள் இல்லாத அல்லது போட்டி குறைவான நிறுவனம்.

**போட்டியின் அளவு:-** போட்டிகள் இல்லாத அல்லது போட்டி குறைவான நிறுவனம்.

**பிற காரணிகள்:-** உரிமையாளரின் பிரபலம், விளம்பரம் போன்றவைகள். திறமை மிகு மேலாண்மை.

**34.** **2018-19 ஆண்டின் வருவாய் செலவினக் கணக்கு**

| சே | தொ | தொ | வருமானம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | 2018-19 சந்தா | 50000 | |
| | | | **(+) பெ.வே.சந்த** | **30000** | **80000** |

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ | தொ | சொத்துக் | | தொகை |
|---|---|---|---|---|---|
| 2019-20 சந்தா மு.பெ | | 5000 | 18-19ல் பெ.சே.சந்தா | | 30000 |
| | | | **17-18 பெ.வே. சந்** | | **2000** |

**35.** எடுப்பு மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.

மார்ச் 1ல் எடுப்பு = 6000 x 12/100 x10/12 = 600

ஜீன் 1ல் எடுப்பு = 4000 x 12/100 x7/12 = 280

செப்டம்பர் 1ல் எடுப்பு = 5000 x 12/100 x4/12 = 200

டிசம்பர் 1ல் எடுப்பு = 2000 x 12/100 x1/12 = 20

எடுப்பு மீது வட்டி 1100

**36.** **கூட்டு சராசரி இலாபமுறை கணக்கிடல்**

| ஆண்டு | இலாபம் | நிறைகள் | கூட்டு லாபம் |
|---|---|---|---|
| 2015 | 10000 | 1 | 10000 |
| 2016 | 12000 | 2 | 24000 |
| 2017 | 16000 | 3 | 48000 |
| 2018 | 18000 | 4 | 72000 |
| **சரிக்கட்டப்பட்ட பின் லாபம்** | | **10** | **154000** |

கூட்டு சராசரி லாபம் = கூட்டு லாபங்களின் எண்ணிக்கை / நிறைகளின் மொத்தம்

= 154000 / 10 = 15400

நற்பெயர்

= கூட்டுசராசரி லாபம் X கொ.ஆ.எ = 15400 X 3 **= 46200**

**37.** புதிய விகிதம்

**புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப் பங்கு**

| | ஹமீத் | கோவிந்த | ஜான் |
|---|---|---|---|
| பழைய பங்கு | $\frac{5}{8}$ | $\frac{3}{8}$ | ---- |
| தியாகப் பங்கு | $\frac{1}{5}$ | $\frac{1}{5}$ | – |
| புதிய பங்கு | $\frac{5}{8}-\frac{1}{5}=\frac{25-8}{40}=\frac{17}{40}$ | $\frac{3}{8}-\frac{1}{5}=\frac{15-8}{40}=\frac{7}{40}$ | $=\frac{2}{5}X\frac{8}{8}=\frac{16}{40}$ |

**புதிய விகிதம் = 17:7:16**

**தியாக விகிதம் = 1:1**

**38. குறிப்பேட்டுப் பதிவுகள்**

| விவரம் | | பற்று | வரவு |
|---|---|---|---|
| பங்குமுதலாவது ம இறுதிஅக/கு | ப | 30000 | |
| பங்கு முதல் க/கு | | | 30000 |
| வங்கி க/கு | ப | 29800 | |
| அழைப்பு நிலுவை க/கு | ப | 200 | |
| பங்கு முதல் ம இறுதி அ க/கு | | | 30000 |

**39. ராதா வரையறு பொது அளவு வருமான அறிக்கை**

| விவரம் | தொகை | விற்பனைமூலம் பெ வருவாயில்சதவீதம் |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 450000 | 100 |
| கூட்டுக:- இதர வருமானம் | 67500 | 15 |
| **மொத்த வருவாய்** | **517500** | **115** |
| கழிக்க:- செலவுகள் | 135000 | 30 |
| **வரிக்கு முன்னர் உள்ள இலாபம்** | **382500** | **85** |

**40. மொத்தக் கடனாளிகள் கணக்கு**

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| இருப்புகீ/கொ | 130000 | ரொக்க க/கு | 420000 |
| விற்பனை க/கு | 540000 | உள்திருப்பக்க/கு | 35000 |
| | | வாராக்கடன்க/கு | 15000 |
| | | இருப்புகீ/இ | 200000 |
| | 670000 | | 670000 |

மொத்த விற்பனை = ரொக்கவிற்பனை+கடன் விற்பனை

460000 + 540000 = **1000000**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. (தொடக்கமுதல்கணக்கிடுதல்)**

| பொறுப்புகள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 105,000 | ரொக்கம் | 43,000 |
| கடன் | 25,000 | சரக்கிருப்பு | 1,20,000 |
| **முதல்** | **4,00,000** | கடனாளிகள் | 84,000 |
| | | வணிக வளாகம் | 2,50,000 |
| | | அறைகலன் | 33,000 |
| | 5,30,000 | | 5,30,000 |

www.Padasalai.Net

**(இறுதி முதல் கணக்கிடுதல்)**

| பொறுப்புகள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 1,02,000 | ரொக்கம் | 29,000 |
| கடன் | 20,000 | சரக்கிருப்பு | 1,30,000 |
| **முதல்** | **4,42,000** | கடனாளிகள் | 1,10,000 |
| | | வணிக வளாகம் | 2,50,000 |
| | | அறைகலன் | 45,000 |
| | 5,64,000 | | 5,64,000 |

**இலாப நட்ட அறிக்கை**

| | |
|---|---|
| இறுதி முதல் (31.03.2017) | 4,42,000 |
| கூட்டுக:- எடுப்புகள் | 30,000 |
| | 4,72,000 |
| கழிக்க:- கூடுதல் முதல் | 45,000 |
| சரிக்கட்டப்பட்ட இ.முதல் | 4,27,000 |
| கழிக்க:- தொடக்க முதல் | 4,00,000 |
| **இலாபம்** | **27,000** |

**41.ஆ. மறுமதிப்பீட்டு கணக்கு**

| விவரம் | தொ | விவரம் | தொ |
|---|---|---|---|
| இயந்திர க/கு | 7000 | கட்டிட க/கு | 12000 |
| வா.ஐ.கடன் க/கு | 1000 | சரக்கிருப்பு க/கு | 2000 |
| ம.மதீப்பீடு லாப<br>இரகுமுதல்க/கு 2000<br>இரவிமுதல்க/கு 3000<br>ரமேமுதல்க/கு 1000 | **6000** | | |
| | 14000 | | 14000 |

**முதல் கணக்கு**

| விவ | ரகு | ரவி | ரமே | விவரம் | ரகு | ரவி | ரமே |
|---|---|---|---|---|---|---|---|
| ரமேமு | 1600 | 2400 | | இகொ | 30000 | 40000 | 20000 |
| **ரமே கடன்** | | | 31000 | காப்பு | 12000 | 18000 | 6000 |
| இகீ | **42400** | **58600** | | மறுமதி | **2000** | **3000** | **1000** |
| | | | | ரகுமுத | --- | --- | 1600 |
| | | | | ரவிமுத | --- | --- | 2400 |
| | **44000** | **61000** | **31000** | | **44000** | **61000** | **31000** |
| | | | | **இகொ** | **42400** | **58600** | ---- |

**42.அ. செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு**

| **விவரம்** | **தொகை** | **விவரம்** | **தொகை** |
|---|---|---|---|
| ரொக்க க/கு | 30000 | இருப்புகீ/கொ | 25000 |
| இருப்புகீ/இ | 20000 | **கடனீந்தோர்க/கு** | **25000** |
| | 50000 | | 50000 |

**மொத்த கடனீந்தோர் கணக்கு**

| **விவரம்** | **தொகை** | **விவரம்** | **தொகை** |
|---|---|---|---|
| ரொக்க க/கு<br>கொ.திருப்ப க/கு<br>செ.மா.சீ. ககு<br>இருப்புகீ/இ | 120000<br>15000<br>25000<br><br>25000 | இருப்புகீ/கொ<br>**கொள்முதல் க/கு** | 30000<br>**155000** |
| | 185000 | | 185000 |

மொத்த கொள்முதல் = ரொ.கொள்+ க. கொள்முதல்

225000 + 155000 = **380000**

**42.ஆ.** நடப்பு விகிதம் =நடப்பு சொத்துக்கள் = **150000=3:1**
**நடப்பு பொறுப்புகள் 50000**

நடப்பு சொத்துகள் = சரக்கிரு + கணக்கு .மூ.பெ.வே+ரொக் மற்றும் ரொக் சமமா + முன்கூட்டி செ.செலவுகள்

= 45000+70000+30000+5000 = 150000

நடப்பு பொறுப்புகள்= கு.கா.கடன் + கணக்கு .மூ.பெ.வே+ கொ.ப.பொ +குறு.கால.ஒதுக்குகள்

=17000+25000+3000+5000=50000

2) **விரைவு விகிதம்= நீர்மைச்சொத்து = 100000=2:1**
**நடப்பு பொறுப்பு 50000**

நீர்மைசொத்து= நடப்புசொதது-சரக்கி– முன்கூ.செலுத்.செலவு

=150000-45000-5000=100000

**43.அ.கோயமுத்தூர் கிரிக்கெட் பெறுதல் செலுத்தல்கணக்கு**

| பெறுதல்கள் | | தொ | செலுத்தல்கள் | தொ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | இருப்பு கீ/கொ | |
| கை ரொக்கம் | | 1000 | வ.மே.பற்று | 6000 |
| சந்தா பெற்றது | | | கூலி | 2000 |
| முந்தைய ஆண்டு | 500 | | கடன் மீ.வட்டி | 2000 |
| நடப்பாண்டு | 9600 | | மதிப்பூதியம் | 2800 |
| எதிராண்டு | 400 | 10500 | மின்சார கட்ட | 700 |
| வி.போ.நி.வரவு | | 5200 | வி.போ.செலவு | 2600 |
| உயில் கொடை | | 2000 | வி.பொ.வாங்கி | 1900 |
| அரங்க ந.கொடை | | 2000 | **இருப்பு கீ/இ** | |
| | | | **ரொக்கம்** | **300** |
| | | | **வங்கி** | **2400** |
| | | **20700** | | **20700** |

**43.ஆ.** மொத்த லாப விகிதம் = மொத்த லாபம் X100
**வி.மூ.பெ.வருவாய்**

$= \frac{600000}{2400000} \times 100$ **= 25%**

மொத்த லாபம் = வி.மூ.பெ.வருவாய் - வி.மூ.பெ.அ விலை

= 2400000-1800000 = **600000**

**நிகர லாப விகிதம் = வரிபின் நிகரலாபம்**X100
**வி.மூ.பெ.வருவாய்**

$= \frac{240000}{2400000} \times 100$ **= 10%**

**44.அ. அப்துல் வரையறு ஒப்பீட்டு வருமான அறிக்கை**

| விவரம் | 15 – 16 | 16 - 17 | கூ(+)கு(-) | சத(+)- |
|---|---|---|---|---|
| விற்பனை மூலம் பெ.வரு | 300000 | 360000 | +60000 | +20 |
| கூட்:-இதர வருமானங்கள் | 100000 | 60000 | -40000 | -40 |
| **மொத்த வருமானம்** | **400000** | **420000** | **+20000** | **+5** |
| கழி:- செலவுகள் | 200000 | 180000 | -20000 | -10 |
| **வரிக்கு முன்னர் இலாபம்** | **200000** | **240000** | **+40000** | **+20** |
| கழிக்க:- வருமானவரி | 60000 | 72000 | +12000 | +20 |
| **வரிக்கு பின்னர் இலாபம்** | **140000** | **168000** | **+28000** | **+20** |

**44.ஆ. தென்காசி திருவள்ளுவர் வருவாய் செலவினக் கணக்கு**

| செலவுகள் | தொகை | வருமானம் | தொகை |
|---|---|---|---|
| சம்பளம் | 20000 | வட்டி பெற்றது | 5000 |
| வாடகை | 24000 | சந்தா | 55000 |
| பயணச் செலவு | 2000 | நுழைவுகட்டணம் | 7000 |
| அச்சு எழுதுபொ | 6000 | | |
| அறை.விற்.நட்டம் | 1000 | | |
| **உபரி** | **14000** | | |
| | **67000** | | **67000** |

www.Padasalai.Net

**45.அ. நிவேதா நிறுமத்தின் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| பங்கு முதல் க/கு ப | 60000 | |
| பங்கு இறுதி அழைப்பு க/கு | | 24000 |
| பங்கு ஒறுப்பிழப்பு க/கு | | 36000 |
| வங்கி க/கு ப | 35000 | |
| பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப | 15000 | |
| பங்கு முதல் க/கு | | 50000 |
| பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப | 15000 | |
| முதலினக் காப்பு க/கு | | 15000 |

**45.ஆ.2019மார்ச்31ம்நாளோடு முடி இலாப நட்ட பகிர்வு கசு**

| விவரம் | தொ | தொ | விவரம் | தொகை |
|---|---|---|---|---|
| மு.மீது.வட்டி<br>துரை<br>வேலன் | <br>1250<br>1500 | <br><br>2750 | இலாப நட்ட கசு | 20000 |
| துரை ஊதியம் | | 5000 | எடுப்புமீதான வ | |
| வேலன் கழிவு | | 2000 | துரை | 300 |
| கூட்டாளி முதல் | | | வேலன் | 450 |
| **துரை** | **4400** | | | |
| **வேலன்** | **6600** | **11000** | | |
| | | **20750** | | **20750** |

**46.அ.** **முதல் க/கு**

| விவரம் | வெற்றி | ரஞ்சித் | சூரியா | விவரம் | வெற்றி | ரஞ்சித் | சூரியா |
|---|---|---|---|---|---|---|---|
| லாபந | 6000 | 4000 | ---- | இகொ | 30000 | 20000 | |
| **இகீஇ** | **30600** | **20400** | **10000** | பொகா | 3000 | 2000 | |
| | | | | மறுமதி | 3600 | 2400 | |
| | | | | ரொக்க | | | 10000 |
| | **36600** | **24400** | **10000** | | **36600** | **24400** | **10000** |
| | | | | **இகொ** | **30600** | **20400** | **10000** |

**இருப்புநிலைக்குறிப்பு**

| **பொறுப்புக** | **தொ** | **தொ** | **சொத்துக்கள்** | **தொ** | **தொ** |
|---|---|---|---|---|---|
| முதல் | | | அறைகலன் | 25000 | |
| வெற்றி | 30600 | | கூ:- மதிப்பே | 15000 | 40000 |
| ரஞ்சித் | 20400 | | சரக்கிருப்பு | 20000 | |
| சூரியா | 10000 | 61000 | க:-குறைப்பு | 2000 | 18000 |
| கடனீந்தோ | | 45000 | கடனாளி | 10000 | |
| கொடுகூலி | | 4500 | கழி:- வா.ஐ. | 2500 | 7500 |
| | | | ரொக்கம் | 35000 | |
| | | | கூ:- சூரியா | 10000 | 45000 |
| | | **110500** | | | **110500** |

**46.ஆ. அனு வரையறு நிறுமத் போக்குப் பகுப்பாய்வு**

| விவரம் | ஆயிரங்களில் | | | போக்கு சதவீதங் | | |
|---|---|---|---|---|---|---|
| | வரு 1 | வரு 2 | வரு 3 | வரு 1 | வரு 2 | வரு 3 |
| **பங்கு மூலதனம் பெ** | | | | | | |
| பங்குதாரர் நிதி | 500 | 550 | 600 | 100 | 110 | 120 |
| நீண்ட காலப் பொறு | 200 | 250 | 240 | 100 | 125 | 120 |
| நடப்பு பொறுப்புகள் | 100 | 80 | 120 | 100 | 80 | 120 |
| **மொத்தம்** | **800** | **800** | **960** | **100** | **100** | **120** |
| **சொத்துக்கள்** | | | | | | |
| நீண்ட சொத்துகள் | 600 | 720 | 780 | 100 | 120 | 130 |
| நடப்புச் சொத்துகள் | 200 | 160 | 180 | 100 | 80 | 90 |
| **மொத்தம்** | **800** | **880** | **960** | **100** | **110** | **120** |

**47.அ. சம்பத் நிறுமத்தின் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| வங்கி க/கு ப | 72000 | |
| நேர்மை பங்கு விண்ணப்ப க/கு | | 72000 |
| நேர்மை பங்கு விண்ணப்ப க/கு ப | 72000 | |
| நேர்மைப் பங்கு முதல் க/கு | | 72000 |
| நேர்மை பங்கு ஒதுக்கீட்டு க/கு ப | 96000 | |
| நேர்மைப் பங்கு முதல் க/கு | | 96000 |
| வங்கி க/கு ப | 96000 | |
| நேர்மை பங்கு ஒதுக்கீடு க/கு | | 96000 |
| நேர் பங்கு முதல் ம இறுதி அ க/கு ப | 72000 | |
| நேர்மைப் பங்கு முதல் க/கு | | 7200 |
| வங்கி க/கு ப | 72000 | |
| நேர் பங்கு முதல் ம இறுதி அ க/கு | | 72000 |

**47.ஆ. Tally ERP 9 ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.**

நடவடிக்கைகளின் விவரங்களை கொண்டுள்ள ஒரு ஆவணமே சான்றாவணமாகும். பெறுதல் சான்றாவணம், செலுத்துதல் சான்றாவணம், எதிர் பதிவு சான்றாவணம், கொள்முதல் சான்றாவணம், விற்பனை சான்றாவணம், உரிய குறிப்பேடு சான்றாவணம்.

www.Padasalai.Net